# என் இயேசுவே உன்னை நான்

என் இயேசுவே உன்னை நான்
மறவேன் மறவேன்
எந்நாளும் உன் அருளை
நான் பாடி மகிழ்ந்திருப்பேன்

**1**
உன் நாமம் என் வாயில்
நல்தேனாய் இனிக்கின்றது
என் அன்பை நாளும் எண்ணும் போது
ஆனந்தம் பிறக்கின்றது
(என் இயேசுவே )

**2**
உன் மேனி பாய்ந்து வரும்
செந்நீராய் நானிருப்பேன்
பிறர் வாழ்வு காண
நானும் ஒருநாள்
ஆறாய் பாய்ந்திடுவேன் (என் இயேசுவே )

**3**
என் ஆசை ஆயிரமாம்
உன்னாலே நிறைவு பெறும்
என் பாச வலைகள் நாச கனிகள்
உன்னல் அறுந்து விடும் (என் இயேசுவே )

**4**
நல் காலை(மாலை) வேளையிலே
நலம் கூற எழும் கதிர்(மதி) போல்
என் வாழ்வில் காலை(மாலை) வந்திடும் போது
எழும்கதிர் (மதி) நீயாவாய்
(என் இயேசுவே )